

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

*அ.எண் :138/2016*
*தேதி. :31.08.2016*

# *அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்*
# *10 ஆம் ஆண்டு துவக்க விழா*
# *சமக நிறுவனத் தலைவர் ஆர் சரத்குமார் அவர்கள் அறிக்கை*

*அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி (31.08.2016) இன்று 9 ஆண்டுகள் முடிந்து 10 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. மாலை 3 மணியளவில் கட்சியின் தலைமை அலுவலகத்தில் கட்சி கொடியேற்றி கேக் வெட்டி இயக்க தோழர்களுக்கும், பொது மக்களுக்கும் இனிப்புகள் வழங்கி விழா கொண்டாடப்பட்டது.*

*மேலும் இவ்விழாவில் மாநில மகளிரணிச் செயலாளர் திருமதி.ராதிகா சரத்குமார், பொருளாளர் ஏ என் சுந்தரேசன், மண்டல செயலாளர் எம் ஏ சேவியர், வர்த்தகரணி செயலாளர் கே ஜே நாதன், இளைஞரணி செயலாளர் சி வி சாமுவேல் மேத்யூ, மகளிரணி துணைச் செயலாளர் எம் பாகீரதி, இளைஞரணி துணைச் செயலாளர் மகாலிங்கம், கலை இலக்கிய அணி துணைச் செயலாளர் ராஜேந்திரன், வர்த்தகரணி துணைச் செயலாளர் ஆதித்தன், தலைமை நிலைய செயலா*

*ளர் அக்வின் நோயல், சென்னை மண்டலத்திற்குட்பட்ட மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று விழாவினை சிறப்பித்தனர்.*

*கட்சியின் 10 ஆம் ஆண்டு துவக்கத்தை முன்னிட்டு தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நிர்வாக அமைப்பு முழுமைபடுத்துதல், கொடியேற்றம், நலத்திட்ட உதவிகள் வழங்குதல், உறுப்பினர் சேர்க்கை முகாம் நடத்துதல் போன்ற நிகழ்ச்சிகளை மேற்கொண்டு விறுவிறுப்புடன் செயல்படுமாறு இயக்க தோழர்களை கேட்டு கொள்கிறேன்.*

*மக்களுக்கு தொண்டாற்றுவதே நமது இயக்கத்தின் தலையாய கடமை என்பதை மனதில் கொண்டு இயக்கத்தின் வளர்ச்சிக்கும், இயக்கத்தின் சகோதரர்களின் வளர்ச்சிக்கும் ஒற்றுமையாக உழைப்போம் உயர்வோம் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*நன்றி, வணக்கம்*
*உழைப்பவரே உயர்ந்தவர்*
*என்றும் அன்புடன்*

***ஆர்.சரத்குமார்** B.Sc*
***நிறுவனத் தலைவர்***